# 1 லூக்கா நற்செய்தி ஆசிரியர்




உரு 1.1 தூய லூக்கா

**ஆசிரியர் :** பிள்ளைகளே! இறைவன் எமக்கு விசேட ஆற்றல்களையும், திறமைகளையும் தந்திருக்கின்றார். இந்த ஆற்றல்கள் திறமைகளை வளர்த்து விருத்தி செய்து சமூகத்திற்கு ஏற்ற பிரஜையாக வாழ்வதே எமது கடமையாகும். சிறு வயதிலிருந்தே ஆசிரியராக வரவேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தது. நன்றாகக் கற்பிக்க வேண்டும் என்று விரும்பினேன். நான் ஒரு ஆசிரியராகி, மாணவர்களுக்கு நல்லவற்றைச் சொல்லிக் கொடுக்க விரும்பினேன். எனவே நான் இப்போது ஆசிரியராக இருக்கின்றேன். கனிஸ்ரன் உமது எதிர்கால நோக்கம் என்னவென்று கூறுவீரா?

**கனிஸ்ரன்:** ரீச்சர் நான் எதிர்காலத்தில் ஒரு வைத்திய நிபுணராகி உதவியற்ற நோயாளிகளுக்கு உதவி செய்ய விரும்புகிறேன்.

**ஆசிரியர் :** மிகவும் நல்லது, நீர் உமது நோக்கத்தை அடைவதற்கு முயற்சிசெய்து கற்க வேண்டும். கிறிஸ்ரி வளர்ந்த பின் நீர் என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறீர்?

**கிறிஸ்ரி :** நான் குருவானவராக வர விரும்புகிறேன். பீடப்பணியாளர் சபையில் சேர்ந்து குருவானவருக்கு உதவி செய்கிறேன். இவ்வாறு எல்லோருக்கும் சேவை செய்ய விரும்புகிறேன்.

**ஆசிரியர் :** நன்று மிக நல்லதொரு கருத்தை கிறிஸ்ரி தெரிவித்திருக்கிறார். அவரது விருப்பம் நிறைவேற நாம் செபிப்போம்.

**ஜோசப் :** ரீச்சர் நான் ஒரு எழுத்தாளராகி, எதிர்காலத்தில் நிறையப் புத்தகங்களை எழுத ஆசைப்படுகின்றேன்.

**ஆசிரியர் :** ஜோசப்! மனிதர்கள் மத்தியில் நல்ல விழுமியங்களை உருவாக்க உம்மால் முடியும். எழுத்தாளர் என்பவர் ஆற்றல் மிக்கவர். இன்று நான் ஆற்றலுள்ள ஒருவரைப்பற்றி உங்களுக்குக் கற்பிக்கப் போகிறேன்.

இவர் திறமையான எழுத்தாளர் என்பதை முழு உலகுமே ஏற்றுக் கொண்டுள்ளது.இவர்தான் தூய லூக்கா. இறைமகனாகிய இயேசுகிறிஸ்துவே இவரது எழுத்தாக்கத்தின் கருப்பொருள். உலக வரலாற்றில் முக்கிய இடம் பெறுபவராக இயேசுவைக் காட்டுகிறார்.

நமது மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையோடு தொடர்புடைய விபரங்களை மிகவும் ஒழுங்கு முறையாக தூய லூக்கா தமது நற்செய்தியில் விபரித்துக் கூறியுள்ளார். இது அறிவு நிறைந்த ஒருவரின் இலக்கிய ஆற்றலாகும். இந்நூலாசிரியர் திறமையான எழுத்தாளர் மட்டுமல்ல, வரலாற்று ஆசிரியரும் ஓவியரும் வைத்தியரும் ஆவார். நற்செய்தியை எழுதியவர்களுள் இவர் ஒருவரே பிற இனத்தவர் ஆவார். (இவர் யூத இனத்தவர் அல்லர்). இவரது நற்செய்தியில் அடங்கியுள்ள அநேக விபரங்கள் கேட்டு அறிந்தவைகள் ஆகும். இவர் அன்னை மரியாவிடமிருந்து விபரங்களைப் பெற்றுக்கொண்டார் என திருச்சபை மரபு கூறுகிறது.

தூய லூக்கா நற்செய்தியை மட்டுமல்ல, திருத்தூதர் பணிகள் என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்த இரண்டு நூல்களிலும் நூலாசிரியரது பெயர் குறிப்பிடப்படாவிடினும் அவற்றின் மொழியும், மொழி நடைகளும் கூர்ந்து கவனிக்கப்படுகையில் இவற்றை ஒரே எழுத்தாளரே எழுதியுள்ளார் என்பது

உறுதிப்படுத்தப்படுகின்றது. திருத்தூதர்களின் காலத்தில் கிறிஸ்தவராகிய இவர், கிரேக்க மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார்.

பழைய ஏற்பாட்டில் பலி செலுத்தும்போது எருது அல்லது காளையைப் பயன்படுத்தியதால் தூய லூக்கா நற்செய்தியின் அடையாளமாக எருது காணப்படுகிறது.

தூய லூக்கா மற்றொரு எழுத்தாளராகிய தூய பவுலின் நண்பர் என்பது திருத்தூதர் பணிகள் நூலில் மட்டுமல்லாது பவுல் எழுதிய திருமுகங்களிலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. பவுல் உரோமாபுரியில் சிறையிலிருந்தபோது, லூக்காவும் அவரோடு இருந்தார் என்பதற்கு கீழே காணப்படும் வேதாகமப் பகுதிகள் ஆதாரமாக அமைகின்றன.

''என்னுடன் லூக்கா மட்டுமே இருக்கிறார். மாற்கை உன்னுடன் கூட்டிவா. அவர் திருத்தொண்டில் எனக்கு மிகவும் பயனுள்ளவர்.''

(2 திமோத்தேயு 4 : 11)

''கிறிஸ்து இயேசுவின் பொருட்டு என் உடன் கைதியாயிருக்கின்ற எப்பப்பிரா, என் உடன் உழைப்பாளர்களான மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, லூக்கா ஆகியோர் உமக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.''

(பிலமோன் 1 : 24)

''அன்பான மருத்துவர் லூக்காவும், தேமாவும் உங்களை வாழ்த்துகின்றனர்.''

(கொலோசையர் 4 : 14)

இரண்டாம் மூன்றாம் தூதுரைப் பயணங்களில் லூக்கா, பவுலுடன் பயணம் செய்துள்ளார். திருத்தூதர் பணிகள் நூலை எழுதிய தூய லூக்கா **'நாங்கள்'**, **'நாங்களும்'** என்று குறிப்பிடும் இடங்களில் அவரும் அந்தப் பயணங்களில் கலந்துகொண்டார் என்பதைக் காட்டுகின்றார்.

இக்காட்சியைப் பவுல் கண்டதும், நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி, அங்கு செல்ல வழி தேடினோம். பின்பு நாங்கள் துரோவாவிலிருந்து கப்பலேறிச் சமொத்திராக்கு தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலி நகருக்கும் நேராகச் சென்றோம்; அங்கிருந்து மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம். அது உரோமையரின் குடியேற்ற நகரம். அந்நகரில் சிலநாள்கள் தங்கியிருந்தோம். ஒரு நாள் நாங்கள் இறைவேண்டல் செய்யும் இடத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது குறி சொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமைப்பெண் ஒருவர் எங்களுக்கு எதிரே வந்தார். அவர் குறி சொல்லி அதனால் தம்மை அடிமையாக வைத்திருப்பவர்களுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கச்செய்து வந்தார். அவர் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து, ‘இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள்; மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள்‘ என்று உரக்கக் கூறினார். பல நாள்கள் அவர் அவ்வாறு செய்து வந்தார். பவுல் எரிச்சல் கொண்டு அவர் பக்கம் திரும்பி, ‘நீ இவரைவிட்டுப் போகுமாறு இயேசுகிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளையிடுகிறேன்‘ என்று அந்த ஆவியிடம் கூறினார். அந்நேரமே அது அவரைவிட்டுச் சென்று விட்டது.

(திப.16 : 10 - 18)

பவுலின் தூதுரைப் பயணங்களில் லூக்காவும் பங்குபற்றினார் என்பதற்கு திருத்தூதர் பணிகள் 21:1, 21:7, 21:12, 21:15 ஆகிய பகுதிகளை உதாரணங்களாகக் காட்டலாம்.

லூக்காவைப் போல் நற்செய்தியை அறிவிப்பதற்கு எங்களுடைய திறமைகளைப் பயன்படுத்த வேண்டும். இறைவன் தந்த அறிவினால் அவரைப் புகழ்வோம். எங்களுடைய எழுத்து ஆற்றல்களால் இறைவனின் வார்த்தையை அறிவிப்பதற்கு பலவகையான ஆக்கங்களை உருவாக்க முன்வருவோம். பாடசாலை சுவரொட்டி களிலும், ஏனைய தகவல் தொழினுட்ப சாதனங்களிலும் எமது ஆக்கங்களை வெளிப்படுத்துவோம். மற்றவர்களையும் ஊக்குவிப்போம். தூய லூக்கா நற்செய்தியை எழுதியதன் மூலம் முழு மனுக்குலத்திற்கும் ஆற்றிய நன்மையை மதித்து அதிலிருந்து கூடியளவு பயனை அடைய முயற்சிப்போம்.

## செயற்பாடு

1. தூய லூக்காவைப் பற்றி ஆக்கம் ஒன்று எழுதுக.

2. உங்களுடைய ஆக்கத்தை கத்தோலிக்க பத்திரிகையின் சிறுவர் பகுதியில், பிரசுரிப்பதற்காக அனுப்புங்கள்.

## வாழ்க்கைக்கு

நற்செய்தியின் தூதுவராக முயற்சியுங்கள்.